சி.ஏ/6/1/2/05 2024.07.25

அனைத்து நிலையப் பொறுப்பான கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர்களுக்கும்,

**<u>கலாசார மத்திய நிலையங்களுக்கிடையிலான பிரதிபா – நடன/ சங்கீத மற்றும் சித்திரப் போட்டி – 2024</u>**

கலாசார மத்திய நிலையங்களுக்கிடையிலாக பிரதிபா சங்கீத, நடன மற்றும் சித்திரப் போட்டி 2024 ஆம் ஆண்டிலும் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

02. அனைத்து கலாசார மத்திய நிலையங்களும் இப் போட்டிகளில் கட்டாயமாகப் பங்குபற்ற வேண்டியதுடன், இதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள சுற்று நிரூபங்கள் மற்றும் இதற்குரிய மாதிரி விண்ணப்பப் படிவங்களும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

03. நடன/ சங்கீத சுற்று நிரூபங்களுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தில் (இலக்கம் 01 தொடக்கம் 06 வரை) உள்ள தகவல்களை உரிய முறையில் பூரணப்படுத்தி விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன் (இறுதித் திகதி அந்தந்த சுற்று நிரூபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது) மேம்பாட்டுப் பிரிவிற்கு கட்டாயமாகக் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

04. நடன/ சங்கீத மாகாண மட்டப் போட்டிகள் நடைபெறும் திகதி அன்று காலை போட்டி ஒழுங்கமைப்பு உத்தியோகத்தருக்கு நிலையப் பொறுப்பதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களைக் கையளித்தல் வேண்டும் அத்துடன் அவ் விண்ணப்பப் படிவங்கள் முன்னர் அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்களில் உள்ள தகவல்களுக்கு இடையில் முரண்பாடுகள் இருத்தல் கூடாது.

05. நடன/ சங்கீத மாகாண மட்டப் போட்டிகள் நடைபெறும் திகதிகள் உள்ளடங்கிய கால அட்டவணை மற்றும் போட்டித் தலைப்புக்கள் சரியான முறையில் மிக விரைவாக தங்களுக்குக் கிடைக்கப்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

06. சித்திர ஆக்கங்களைச் சமர்ப்பிக்கும் போது அந்த அந்த போட்டிப் பிரிவுகளின் கீழ் கமலாசார மத்திய நிலைய மட்டத்தில் ஒரு பிரிவில் 05 ஆக்கங்கள் எனத் தெரிவு செய்து மாகாண மட்டப் போட்டிக்காக அமைச்சிற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

திலக் நந்தன ஹெட்டிஆரச்சி
மேலதிக செயலாளர் (கலாசார மேம்பாடு)
புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள்
அமைச்சின் செயலாளருக்காக